**இபலோகம பிரதேச சபை**
**அநுராதபுர மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 ஜுலை 09 ஆந்திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்டம்பர் 04 ஆந்திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இபலோகம பிரதேச சபையின் 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆந் திகதிக்கு விளம்பரப் பலகைகள் நிலுவை வருமானம் ரூபா 60,800 நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை | சகல வருமானங்களும் கணக்கீடு செய்யடப்படல் வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |
| (ii) | மீளாய்வாண்டில் ரூபா 11,767,074 ஆகவிருந்த களஞ்சியத் தொகுதி கட்டிடங்களை புதுப்பித்தல் மற்றும் மீள்கட்டமைப்புச் செலவில் உள்ளடங்கியிருந்த மூலதனப் பெறுமதியுள்ள விடயங்களைக் கண்டறிந்து அவை மூலதனமாகக் கொள்ளப்பட்டிருக்கவில்லை | மூலதனச் செலவுகளை கண்டறிந்து கணக்கீடு செய்யடப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன் |
| (iii) | மஹாஇலுப்பல்லம களஞ்சியத் தொகுதிக்கு நீர்வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்காக செலவுசெய்யப்பட்ட ரூபா 400,543 | மூலதனச் செலவுகளை கண்டறிந்து கணக்கீடு செய்யடப்படல் | ஏற்றுக் கொள்கிறேன் |

| | | | |
|---|---|---|---|
| | மூலதனமாக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | |
| (iv) | பிரதேச சபைக்குச் சொந்தமான சிறிக்குளம் மற்றும் கடியன்கல ஆகிய இடங்களில் ரூபா 2,720,000 பெறுமதியான கட்டிடங்கள் மற்றும் நீர் சுத்திகரிக்கும் முறைமைகள். மூலதனமாகக் கொள்ளப்படவில்லை | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யடப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன் |
| (v) | பிரதேச சபைக்குச் சொந்தமான விளையாட்டு அரங்குகள் மற்றும் பூமிகளின் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிலிடப்படவில்லை | மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு கணக்கீடு செய்யடப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன் |
| (vi) | பிரதேச சபைக்குரிய நூல்நிலையங்களின் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்தவற்காக 2017ஆம் ஆண்டுக்காக உள்ளூராட்சி திணைக்களத்திலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 99,120 கைத்தொழில் கடன்பட்டோர் முறையின்கீழ் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்கிணங்க செலுத்த வேண்டிய பெறுமதி கைத்தொழில் கடன்கொடுத்தோர் முறையின்கீழ் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | கடன்கொடுத்தோர் சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன் |

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் டிசம்பர் 31ஆம் திகதிக்கு செலுத்த வேண்டிய ஓய்வூதியத் தொகையான 560,637 ரூபா 05 வருடங்களாக செலுத்தப்பட வில்லை. | செலுத்த வேண்டிய நிலுவையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | செலுத்த வேண்டிய நபர்கள் பற்றிய விபரங்களை ஓய்வூதியத் திணைக்களத்தினால் கண்டறிந்து அத்தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |

**(இ) கணக்காய்விற்கு சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுமதி ரூபா 176,202,210 ஆகவுள்ள 05 கணக்கீட்டு விடயங்களுக்கு உரிய ஏற்றுக் கொள்ளக்கூடிய சாட்சியங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள பெறுமதியை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான எழுத்துச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றம் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| | 134 ஆம் பிரிவு | சபை அதிகாரத்திற்கு உட்பட்ட அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்கள் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டு வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விதிக்கு ஏற்ப செயற்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றேன். |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிகள் கையேடு | | | |
| | விதி 5.11 | சபைக்கு சொந்தமான பணம் மற்றும் ஏனைய பெறுமதியான பொருட்கள் தொடர்பாக பாதுகாப்பு காப்புறுதியைப் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. | பிரதேச சபை விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2006 நவம்பர் 14 ஆம் திகதிய PL/ 53/01/07 ஆம் இலக்க உள்ளூராட்சி மற்றும் அமைச்சின் புனரமைப்பு சுற்றறிக்கை<br>------------------------<br>இலக்கம் 06 இல் 2.2 (iii) | தொடர்ச்சியாக செயற்படுத்தப்படக் கூடிய பாதை பராமரிப்பு வழிமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்க வில்லை. சபைக்குரிய வீதிகளை வர்த்தமானியில் பிரசுரிக்காதிருந்ததுடன், கொண்டு செல்லப்படக் கூடிய அதிகபட்ச எடை காட்சிப்படுத்தப்பட்டிருக் கவில்லை. | சுற்றறிக்கை யின் பிரகாரம் செயற்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 டிசம்ப் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 9,087,386 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,544,143 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,436,800 | 2,666,850 | 2,462,675 | 1,007,362 | 1,307,700 | 1,745,687 | 1,241,763 | 803,187 |
| (ii) | வாடகை | 4,219,676 | 3,441,061 | 3,467,357 | 497,349 | 982,680 | 3,191,475 | 1,201,930 | 523,645 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 238,000 | 223,550 | 223,550 | - | 2,550,790 | 1,036,380 | 2,533,483 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 6,398,646 | 8,007,802 | 9,028,664 | 6,824,802 | 5,585,936 | 9,490,434 | 11,786,029 | 7,845,664 |
| | மொத்தம் | 13,293,12 | 14,339,263 | 15,182,246 | 8,329,513 | 10,427,106 | 15,463,976 | 16,763,205 | 9,172,496 |

**2.2.2 வீதவரியும் வரியும்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆந் திகதிக்கு நிலுவையிலுள்ள நிலுவையிலுள்ள குப்பை வரி வருமானம் ரூபா 1,007,362 ஆகும். | நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |

**2.2.3 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆந் திகதிக்கு அறவிடப்பட வேண்டிய வாடகை வருமானம் ரூபா 120,803ஆகும். | நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |

**2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2019 டிசம்பர் 31 இற்கு கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 4,766,402 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 2,058,400 ஆகும். | குறித்த தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற

சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 28 பிரதான விடயங்களை நிறைவேற்று வதற்கான உப விதிகள் பிரயோகிக்கப்பட வேண்டியிருப்பினும், 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு குறித்த விடயங்கள் தொடர்பாக உபவிதிகள் பிரயோகிக்கப் பட்டிருக்கவில்லை | உப விதிகள் பிரயோகிககப்படாத விடயங்கள் தொடர்பாக உப விதிகள் பிரயோகிக்கப்பட வேண்டும். | பிரதேச சபைச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் குறித்த விடயங்களுக்கு உப விதிகளைப் பிரயோகிப்பது தொடர்பாக வடமத்திய மாகாண சபையினால் அனுமதி அளிக்கப்பட்ட உப விதிகள் 10 ஐ இப்பிரதேச சபைக்கும் பிரயோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 பிரகாரம் அடைய வேண்டிய இலக்குகளை நிறுவி நிகழ்ச்சித் திட்டங்களை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | குறித்த நிகழ்ச்சி நிரல் தொடர்பாக தெளிவுபெற்று அதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் குறைந்த விலைமனு பெறுமதியான ரூபா 142,650 பெறுமதி கொண்ட 10 சொத்துக்களை குத்தகைக்கு வழங்குவதற்கு முடியாமல் போனமையால் சபைக்கு கிடைக்கவிருந்த வருமானத்தில் இழப்பு ஏற்பட்டது. | குத்தகைக்கு வழங்க முடியுமான சகல சொத்துக்களையும் குத்தகைக்கு வழங்கி கேள்வி வருமானத்தை உயர்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.3.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பிரதேச சபைக்குச் சொந்தமான விளையாட்டரங்குகள் மற்றும் விளையாட்டு மைதானங்களை சபைக்கு கையேற்க நடவடிக்கை நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | குறித்த விளையாட்டு மைதானங்களை கையேற்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (ஆ) சபையினால் பயன்படுத்தப்பட்ட ரூபா 13,571,373 ஆன வாகனங்கள் மற்றும் இயந்திரசாதனங்கள் 03 சபைக்கு கையேற்கப்பட்டிருக்க வில்லை. | குறித்த சொத்துக்களை கையேற்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | |

### 3.3.2 விளைவற்ற / பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையிடமுள்ள ரூபா 3,264,000 பெறுமதியான 05 வாகனங்கள் 03 வருடங்களை விஞ்சிய காலப்பகுதியிலிருந்து செயலற்றுக் காணப்பட்டன. | குறித்த சொத்துக்களை பாவனைக்கு எடுப்பதற்கு அல்லது பயன்படுத்த முடியாத சொத்துக்களை முறைப்படியாக ஏலத்தில் விடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | ஏற்றுக்கொள்கிறேன். |